செய்தி வெளியீடு எண்:261 **நாள்: 27.5.2009**

<u>பள்ளி வளாகங்களிலேயே பத்தாம் வகுப்பு பதிவு</u>
<u>மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பு</u>

கடந்த ஆண்டு சட்டமன்றத்தில் நிதிநிலை அறிக்கைக் கூட்டத் தொடரின்போது, மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் அறிவித்தவாறு பத்தாம் வகுப்பு /மேல்நிலை வகுப்புத் தேர்வு முடிவுகளையொட்டி வேலைவாய்ப்பிற்குப் பதிவு செய்ய வரும் மாணவர்களை மாவட்டந்தோறும் ஒன்றுக்கு மேற்பட்ட இடங்களில் பதிவு செய்ய ஏற்பாடுகள் செய்து பதிவு செய்யப்பட்டது.

**2008 – 09** கல்வி ஆண்டில் **6,40,844** மாணவர்கள் பன்னிரண்டாம் வகுப்புத் தேர்வு எழுதி தேர்வு முடிவுகள் வெளியாகி சான்றிதழ்கள் அளிக்கப்பட்டு வருகின்றன. இவர்களுக்குப் பதிவுகள் மேற்கொள்ள ஒவ்வொரு மாவட்டத்திலும் எந்தெந்த இடங்களில் பதிவு மேற்கொள்ளப்படுகின்றது என்ற விவரம் உரிய மாவட்ட நிர்வாகத்தால் செய்தித்தாள்களில் வெளியிடப்பட்டு மாநிலம் முழுவதும் **100** மையங்களில் பதிவுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**2008 – 09** ம் கல்வி ஆண்டில் **8,22,872** மாணவர்கள் பத்தாம் வகுப்பு தேர்வு எழுதியுள்ளனர். பத்தாம் வகுப்பு தேர்வு முடிவுகள் அண்மையில் வெளியாகி விரைவில் மதிப்பெண் சான்றிதழ் அளிக்கப்படவுள்ளது. இவர்களின் பதிவுக்காக மாவட்டத் தலைநகரிலுள்ள வேலைவாய்ப்பு அலுவலகத்திற்கு செல்வதற்காக போக்குவரத்துச் செலவினையும், கால விரயத்தையும், கூட்ட நெரிசல் போன்ற இடர்பாடுகளையும் தவிர்க்கும்பொருட்டு மாணவர்களின் நலன் கருதி, அவர்கள் வசதிக்காக, இந்த ஆண்டு முதல் மாணவர்கள் தாங்கள் பயின்று மதிப்பெண் சான்று பெறும் பள்ளிகளின் வளாகத்திலேயே பதிவு செய்து கொள்ள கல்வித்துறையின் ஒத்துழைப்புடன் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. எனவே பள்ளி தலைமை ஆசிரியர்கள் விண்ணப்பங்களை பூர்த்தி செய்து அவற்றுடன் மதிப்பெண் பட்டியல், சாதிச் சான்று, மாற்றுச் சான்றிதழ் ஆகியவற்றினை சரிபார்த்து, தலைமை ஆசிரியரின் முத்திரையுடன் கூடிய சான்றொப்பமிட்டு, பள்ளியின் மொத்த விண்ணப்பப் படிவங்கள் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும். ஒரு வார காலத்திற்குள் வேலைவாய்ப்பு அடையாள அட்டைகள் பள்ளிகளில் மாணவர்களுக்கு வழங்கப்படும். இவ்வாறு மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் தா. மோ. அன்பரசன் அவர்கள் தெரிவித்தார்.

ஆ.சு. ஜீவரத்தினம், இ.ஆ.ப.,
ஆணையர்
வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**